0052

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**கல்விப்பீடம்**
**கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**
**இறுதிப் பரீட்சை**
**STP9617– ஆசிரியர் கல்வி**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 07.02.2026** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30**

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.**

1. **i.** இலங்கையில் உள்ள பிரதான ஆசிரியர் கல்வி நிறுவனங்களை இனங்கண்டு, வகைப்படுத்துவதுடன் ஆசிரியரின் வாண்மை விருத்தி தொடர்பாக அவற்றின் வகிபங்குகளைச் சுருக்கமாக ஆராய்க. **(05 புள்ளிகள்)**

   **ii.** கல்வித் தேவைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப ஆசிரியர் தரம், ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வி சார் மறுசீரமைப்புக்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தினை கருத்திற்கொண்டு தொடர் வாண்மை விருத்தியின் முக்கியத்துவத்தினை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

   **iii.** இலங்கை ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்தியில் எதிர்கொள்ளும் **இரண்டு (02)** பிரதான சவால்களை விமர்சன ரீதியாக பரிசீலிப்பதுடன் எதிர்கால தொடர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வலுவூட்டுக் கூடிய நடைமுறைசார் உத்திகளை முன்மொழிக. **(10 புள்ளிகள்)**

2. **i.** கற்பித்தலில் வாண்மைசார் ஒழுக்க நெறி எனும் எண்ணக்கருவினை வரைவிலக்கணம் செய்து, இலங்கை ஆசிரியர்களுக்காக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் **மூன்று (03)** பிரதான ஒழுக்கநெறி அடிப்படைகளை இனங்காண்க. **(05 புள்ளிகள்)**

   **ii.** வகுப்பறை முகாமைத்துவம் மாணவர், பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தற்போதைய இலங்கை சூழமைவில் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ ஒழுக்க நெறியின் முக்கியத்துவத்தினை இனங்காண்க. **(10 புள்ளிகள்)**

   **iii.** இலங்கையின் தற்போதைய சமூக சூழமைவிற்கேற்ப வாண்மைத்துவ ஒழுக்கநெறியினை நடைமுறைப்படுத்துவதில் கொள்கை வகுப்பாளர்கள் எதிர்நோக்கும் சவால்களை பரிசீலனை செய்க. **(10 புள்ளிகள்)**

3. **i.** கற்பித்தல் ஒரு வாண்மையாகும், என்பதனை இரு நியாயிப்புக்கள் தந்து, வரைவிலக்கணம் செய்க. **(05 புள்ளிகள்)**

   **ii.** வகுப்பறை கற்பித்தல், மாணவர் விருத்தி, சமூக விருத்தியினை பூர்த்தி செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாண்மையாளர் என்ற வகையில் ஆசிரியர்களின் வகிபங்குகள் மற்றும் பொறுப்புக்களை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

   **iii.** கற்பித்தல் ஒரு வாண்மை என்பதனை ஏற்பதில் எதிர் கொள்ளப்படும் **மூன்று (03)** சவால்களை விமர்சன ரீதியாக பரிசீலிப்பதுடன் இலங்கைக் கல்வி சூழமைவில் கற்பித்தல் வாண்மையினை வலுப்படுத்துவதற்குரிய பொருத்தமான செயலொழுங்குகளையும் பரிந்துரைக்குக. **(10 புள்ளிகள்)**

4. **i.** இலங்கை ஆசிரியர் கல்வி முறைமையினால் தற்போது எதிர்கொள்ளப்படும் **மூன்று (03)** பிரதான பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

   **ii.** இலங்கையில் ஆரம்ப ஆசிரியப் பயிற்சியின் தற்போதைய சமூகத் தேவைகள் மற்றும் வினைத்திறனை பாதிக்கக்கூடிய கலைத்திட்டம் சார்ந்த எழுவினாக்களை விளக்குக. **(10 புள்ளிகள்)**

**iii.** மேற்கண்ட பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய இலங்கையின் ஆரம்ப ஆசிரியர் பயிற்சியின் தரத்தினை மேம்படுத்தும் வகையிலான நடைமுறைசார் தீர்வுகளை விமர்சன ரீதியாக ஆராய்க. **(10 புள்ளிகள்)**

**5. i.** ஆசிரியர் கல்வி முறைமையில் முகிழ்ந்தெழும் உலகலாவிய போக்குகள் **மூன்றினை (03)** எழுதுக. **(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையின் ஆசிரியர் கல்வி முறைமைக்குள் இப்புதிய போக்குகளை எங்ஙனம் அறிமுகம் செய்யலாம்? என ஆராய்க. **(10 புள்ளிகள்)**

**iii.** இலங்கை ஆசிரியர் கல்வியில் இப்பூகோளப் போக்குகளை வினைத்திறனான முறையில் ஒன்றிணைப்பதில் உள்ள சவால்களையும் அதற்கான தீர்வுகளையும் விமர்சன ரீதியாக ஆராய்க. **(10 புள்ளிகள்)**

**6. i.** ஆசிரியர் வலுவூட்டல் என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணம் செய்க. **(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கை ஆசிரியர்களை வலுப்படுத்தல் தொடர்பான முக்கிய **மூன்று (03)** விடயங்களை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

**iii.** இலங்கை கல்வி சூழமைவில் ஆசிரியர் வலுவூட்டலை மேம்படுத்துவதில் உள்ள சவால்களை விமர்சன ரீதியாக பரிசீலிப்பதுடன் ஆசிரியர் வலுப்படுத்தலை மேம்படுத்துவதற்கான பொருத்தமான உத்திகளைப் பரிந்துரை செய்க. **(10 புள்ளிகள்)**

- *பதிப்புரிமை பெற்றது* -